இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 04-05-2025

# இளையோர் அரசு, அறிவின் அரசு!

இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளை உருவாக்கும் அரசாக, தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

"விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த நான், எட்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்தேன். சிறுவயது முதல் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்பது எனது இலட்சியம். தமிழ்நாடு முதலமைச்சர் அறிமுகப்படுத்திய 'நான் முதல்வன்' திட்டம் எனது லட்சியத்தை அடைய பயனுள்ளதாக இருந்தது. 'நான் முதல்வன்' திட்டத்தை உருவாக்கி அதைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி" என்று சொல்லி இருக்கிறார் மாணவி தீபிகா.

"ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு முதலில் நான் தனியாகப் படித்தேன். ஆனால் எனக்கு தேர்ச்சி கிடைக்கவில்லை. அதன் பிறகு 'நான் முதல்வன்' திட்டத்தில் சேர்ந்து படித்தேன். கடின உழைப்பால் வெற்றி கிடைத்தது" என்று சொல்லி இருக்கிறார், தமிழ்நாடு அளவில் முதலிடம் பிடித்த மாணவர் சிவச்சந்திரன்.

2024இல் நடைபெற்ற குடிமைப் பணித் தேர்வை இந்திய அளவில் 5.83 லட்சம் பேர் எழுதினார்கள். இதில் 1,009 பேர் முதன்மைத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 57 பேர். இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும்.

2014இல் குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களில் 11 விழுக்காடு மாணவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். 2017இல் இது 7 விழுக்காடாகக் குறைந்தது. 2019 ஆம் ஆண்டில் 6.69 விழுக்காடாக இறங்கியது. 2020 ஆம் ஆண்டில் 5 விழுக்காடாகத் தேய்ந்தது. 2021 இல் தி.மு.க. அரசு அமைந்த பிறகு இதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது.

**அனைத்து மாணவர்களையும் தனித் திறமை கொண்டவர்களாக மாற்ற 'நான் முதல்வன்' என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கினார்கள். இதில் தனிப்பிரிவாக ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு பயிற்சி தரப்பட்டது. 'நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவை' 7.3. 2023 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் தொடங்கி வைத்தார். அதன் வெற்றியைத்தான் இப்போது நாம் பார்க்கத் தொடங்கி இருக்கிறோம்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த சிவச்சந்திரன் என்ற மாணவர் மாநிலத்தில் முதலிடமும் அகில இந்திய அளவில் 23 ஆம் இடமும் பெற்றுள்ளார். மோனிகா என்ற மாணவி இந்திய அளவில் 39 ஆம் இடம் பெற்றுள்ளார். இருவரும் தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் படித்த 134 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்ற நிலையில், 50 பேர் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். தமிழ் வழியில் தேர்வு எழுதிய காமராஜ், சங்கர பாண்டியன் உள்ளிட்டோரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "நான் முதல்வன்" திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களும் வழங்கி வாழ்த்தினார்கள்.

இது குறித்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் பெருமிதத்துடன் துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்கள் பேசினார்கள்.

"யு.பி.எஸ்.சி. (UPSC) தேர்வு முடிவுகள் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது. 'நான் முதல்வன்' போட்டித்தேர்வுகள் பிரிவை கடந்த 2023-ஆம் ஆண்டு நாம் துவங்கினோம். சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ் செயல்படும் இந்தப் பிரிவுக்காக முதல் -அமைச்சர் 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்தார். இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே, 47 தமிழ்நாட்டு மாணவர்கள் UPSC தேர்வில் வெற்றி பெற்றார்கள். இது முந்தைய ஆண்டுகளைவிட கிட்டத்தட்ட 30 சதவீதம் அதிகமானதாகும். அதன் தொடர்ச்சியாகத்தான், இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 57 மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். 57 மாணவர்களில் 50 மாணவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை பெற்றவர்கள். அவர்களில் '18 பேர் நான் முதல்வன்' உறைவிடப் பயிற்சித் திட்டத்தால் பயன் பெற்றவர்கள்" என்று குறிப்பிட்டார் துணை முதலமைச்சர் அவர்கள்.

- **ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்விற்காக தயாராகி வரும் ஆர்வலர்களில் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வீதம் மொத்தம் ரூ.75,000/- அரசு வழங்கி வருகிறது.**
- **முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு, ரூ.25,000 ஊக்கத் தொகையாக அரசு வழங்கி வருகிறது.**
- **அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிலும் முதன்மைத் தேர்வுப் பயிற்சி மாணவர்களுக்கு ரூ.9,000 அரசு வழங்கி வருகிறது.**
- **டெல்லியில் நடைபெறும் குடிமைப்பணி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கு இதுவரை 5 ஆயிரம் ரூபாய் தரப்பட்டு வந்தது. அதனை ரூ. 50 ஆயிரம் ஆக்கி உள்ளது அரசு.**
- **மதுரை, கோவையில் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு பயிற்சிக்காலம் இதுவரை 6 மாதமாக இருந்தது. இது 9 மாதம் என உயர்த்தப்பட்டது. அவர்களுக்கு உணவுக்காகச் செலவிடப்படும் மாதாந்திரத் தொகை ரூ.3000/-லிருந்து ரூ.4500/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**
- **சென்னை அண்ணா நகரில் 4000 சதுர அடி பரப்பில் 200 மாணவர்கள் அமர்ந்து படிக்கும் வகையில் குளிரூட்டப்பட்ட படிப்பகம் 'நான் முதல்வன்' திட்டம் வாயிலாகத் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.**
- **சென்னை செனாய் நகர் பகுதியில் 500 மாணவர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் ஒரு பயிற்சி மையம் 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

இந்திய குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் வென்று, இந்திய ஆட்சிப் பணிப் பதவிகளைக் கைப்பற்ற மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு துணை முதலமைச்சரும் உறுதி ஏற்றுச் செயல்பட்டு வருகிறார்கள். இது தமிழ்நாட்டு இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இளைஞர் அரசாக, அறிவின் அரசாகச் செயல்படுவதாக இளைஞர்கள் பாராட்டி வருகிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (1.5.2025) அன்று உழைப்பாளர் தினமான மே நாளையொட்டி சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவில் அமைந்துள்ள நினைவுச் சின்னத்திற்கு மலரஞ்சலி செலுத்தி, உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், நாடாளுமன்ற உறுப்பினரும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளருமான மு. சண்முகம், தலைவர் நடராசன், தொழிலாளர் அணி செயலாளர் செல்வராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும்

# 3 விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது - 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மே 4-**

**உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் மூன்று விவசாயிகளுக்கு 2025ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருது மற்றும் 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.5.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் தமிழ்நாட்டில் உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் மூன்று விவசாயிகளுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருதினையும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.05.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாட்டில் உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த க.சம்பத்குமார் அவர்களுக்கு முதல் பரிசாக 2.50 இலட்சம் ரூபாய் மற்றும் ரூ.10,000/ மதிப்பிலான பதக்கமும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த த.ஜெகதீஸ் அவர்களுக்கு இரண்டாம் பரிசாக 1.50 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் ரூ.7,000/ மதிப்பிலான பதக்கமும், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வே.காளிதாஸ் அவர்களுக்கு மூன்றாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் மற்றும் ரூ.5,000/ மதிப்பிலான பதக்கமும், என மூன்று விவசாயிகளுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருதுகளை வழங்கினார்.

வேளாண்மைத் துறைக்கு சிறப்பிடம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக, விவசாயப் பெருமக்களை அழைத்து, அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதோடு, உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றமும் செய்யப்பட்டு, வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், பயிர் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு சீரிய திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அதுமட்டுமின்றி, சுற்றுச்சூழல் மற்றும் பொதுநலன் கருதி இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தோட்டக்கலைப் பயிர்களில் உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்க இடுபொருள் மானியம், இயற்கை வேளாண் இடுபொருட்களை உற்பத்தி செய்யும் அலகுகள் அமைத்திட குழுக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மானியம், நீலகிரி மாவட்டத்தில் இயற்கை வேளாண்மைக்கான சிறப்புத் திட்டம், வட்டாரத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 385 வட்டாரங்களில் உயிர்ம வேளாண்மைக்கான செயல்விளக்கத்திடல்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவை தவிர இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்த ஏதுவாக பூமாலை வணிக வளாகம் உள்ளிட்ட அரசு கட்டடங்களில் வசதிகள் ஏற்படுத்தித் தருதல், இயற்கை வேளாண்மை மேற்கொள்ள ஊக்கத்தொகை வழங்குதல், இயற்கை வேளாண்மை சான்றிதழுக்கான பதிவுக்கட்டணத்திற்கு முழு விலக்கு அளித்தல், இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்கள் 2025-26ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

### மூன்று நபர்களுக்கு 'நம்மாழ்வார் விருது' வழங்குதல்!

2023-2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை – உழவர் நலத் துறையின் நிதிநிலை அறிக்கையில், உயிர்ம வேளாண்மையில் நம்மாழ்வார் அவர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், உயிர்ம வேளாண்மையில் ஈடுபடும், ஊக்குவிக்கும் மற்றும் பிற உயிர்ம விவசாயிகளுக்கு கைகொடுக்கும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசால் இயற்கை வேளாண்மையை விவசாயிகளிடம் பெருமளவில் கொண்டு சேர்த்த "நம்மாழ்வார்" அவர்களின் பெயரில் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, அவ்வகையில் 2024ஆம் ஆண்டு மூன்று விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 2025 ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருது, உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த க.சம்பத்குமார் அவர்களுக்கு முதல் பரிசாக 2.50 இலட்சம் ரூபாய் மற்றும் ரூ.10,000/மதிப்பிலான பதக்கமும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த த. ஜெகதீஸ் அவர்களுக்கு இரண்டாம் பரிசாக 1.50 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் ரூ.7,000/ மதிப்பிலான பதக்கமும், நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த வே.காளிதாஸ் அவர்களுக்கு மூன்றாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் மற்றும் ரூ.5,000/ மதிப்பிலான பதக்கமும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வழங்கி சிறப்பித்தார்.

### 151 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் !

வேளாண்மை - உழவர் நலத் துறை சார்ந்த பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், அரசின் வேளாண் திட்டங்கள் கடைக்கோடி விவசாயிகளுக்கும் சென்றடையும் வகையிலும், காலியாகவுள்ள பணியிடங்கள் படிப்படியாக விரைந்து நிரப்பப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை வேளாண்மை - உழவர் நலத்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக பல்வேறு வகையான தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட 1,799 நபர்களுக்கும், பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 265 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், என மொத்தம் 2,064 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், தற்போது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 76 இளநிலை உதவியாளர்கள், 68 தட்டச்சர்கள் மற்றும் 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் என மொத்தம் 151 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வில் பணிநியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மே 11ஆம் தேதி மாம்பாக்கத்தில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## டி.ஆர்.பாலு சிறப்புரை: மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

*காஞ்சிபுரம், மே 4-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 11ஆம் தேதி மாலை மாம்பாக்கத்தில் நடைபெற உள்ளது என்றும், இக்கூட்டத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி. சிறப்புரை ஆற்ற உள்ளார் என்றும் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 11.5.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில், திருப்போரூர் வடக்கு ஒன்றியம், மாம்பாக்கத்தில் மேடவாக்கம் சாலையில் அமைந்துள்ள விக்னேஷ் மகால் திருமண மண்டபத்தில், மாவட்ட கழக அவைத்தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட கழக பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.*



*கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எம்.பி. அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.*

*கழக நாடாளுமன்ற சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள், மாநகர வட்ட கழக செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.*

*இக்கூட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாகவும், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் வாக்குச்சாவடி வாரியாக வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோ சனைக் கூட்டம் நடத்துவது சம்பந்தமாகவும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் தா. மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.*